செய்தி வெளியீடு எண்: 240 நாள்: 30.03.2012

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 27.3.2012 அன்று தலைமைச் செயலகத்தில், இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்ற பார்வையற்ற பத்து மாற்றுத் திறனாளிகளுக்கு இடைநிலை ஆசிரியர்களுக்கான பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்ற பார்வையற்ற பத்து மாற்று திறனாளிகள் தங்களுக்கு ஆசிரியர் பணி நியமனம் வேண்டி தமிழக அரசுக்கு கோரிக்கை மனுவினை அளித்தார்கள். அவர்களது கோரிக்கை மனுக்களை கனிவுடன் பரிசீலனை செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்ற பார்வையற்ற மாற்று திறனாளிகளுக்கு உடனடியாக பணிநியமனம் வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டிருந்தார்கள். அதன்படி, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களில் இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்ற பார்வையற்ற பத்து மாற்றுத் திறனாளிகளுக்கு விதிகளை தளர்வு செய்து பணிநியமனம் செய்திட 9.1.2012 அன்று அரசாணை வெளியிடப்பட்டது.

தமிழகத்தில் இடைநிலை ஆசிரியர் பயிற்சி முடித்த பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளை பள்ளிக் கல்வித் துறையின் கீழ் இயங்கும் ஆரம்பப் பள்ளிகளில் பணியமர்த்தும்பொழுது சிறு குழந்தைகளை கவனிக்க இயலாதது போன்ற சில நடைமுறை இடர்பாடுகள் ஏற்படுகின்றன. இதனைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கருணை உள்ளத்தோடு, அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 8–ஆம் வகுப்புகளுக்கான பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களில், இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்ற பார்வையற்ற பத்து மாற்றுத் திறனாளிகளுக்கு 27.3.2012 அன்று

தலைமைச் செயலகத்தில், இடைநிலை ஆசிரியர்களுக்கான பணிநியமன ஆணைகளை வழங்கி வாழ்த்தினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடமிருந்து பணிநியமன ஆணைகளை பெற்றுக் கொண்ட பார்வையற்ற மாற்றுத் திறனாளிகள் பல ஆண்டுகளாக வேலை வாய்ப்பின்றி வறுமையில் வாடியிருந்த தங்களுக்கு இடைநிலை ஆசிரியர்களுக்கான பணிநியமன ஆணைகளை வழங்கி, வாழ்வில் ஒளியேற்றியமைக்கு தங்களது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் அவர்கள், தலைமைச் செயலாளர், பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர், பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
நாள்: 30.3.2012